# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் : 29/மா/2022
நாள் : 11.04.2022

திரு. B. விஜயகுமார்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –04, பெருநகர சென்னை மாநகராட்சி – எதிர்மனுதாரர்

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சாலட் குறுக்கு தெரு, எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் B. விஜயகுமார் என்பவரின் 24.02.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.03.2022 அன்று பெறப்பட்டு 29/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், சாலட் குறுக்கு தெரு, எண்.14/15 என்ற முகவரியில் வசிக்கும் B. விஜயகுமார் என்பவர் தமது புகார் மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“ சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டை தாலுக்கா, மண்டலம் –04, டிவிசன் –41, அஜிஸ் நகர், எண்ணூர் நெடுஞ்சாலை, கதவு எண். 15/9, R.K. நிதி நிறுவனம் என்ற இடத்தில் (கீதா ஸ்டோர் எதிரில்) திரு.கிருஷ்ணகுமார் என்பவரால் உள்ளாட்சி அமைப்புகளிடம் முறையாக எந்தவிதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் கடந்த வருடம் கட்டிடம் கட்டப்பட்டு தற்போது முழுவதும் முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் அமைந்த சாலையான எண்ணூர் நெடுஞ்சாலை, சென்னை பெருநகர் இரண்டாம் வளர்ச்சி திட்டம்–2026,ன் படி 27m லிருந்து 30m சாலையாக மாற்றம் செய்யப்பட வேண்டிய சாலையாகும். அதற்காக தேவைப்படும் நிலங்கள், வளர்ச்சி தொகை ஆகியவை கட்டிட அனுமதி அளிக்கும்போது உரிமையாளரிடமிருந்து பெறப்பட வேண்டும். இவற்றை கண்காணிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் தவறிவிட்டதால், மாநகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டதுடன், மேற்கண்ட வளர்ச்சிதிட்டம் முறையாக நடைமுறைப்படுத்த பெரும் இடைஞ்சலாக உள்ளது. மேலும் விரைவில் இந்தப்பகுதியில் தொடங்க

உள்ள மேம்பால பணிகளுக்கும் விரிவாக்கப்பட வேண்டிய சாலை பகுதிகள் தேவைப்படுவதால் அந்த பணிகளிலும் தொய்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது தொடர்பாக பலமுறை சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களிடம் புகார் அளிக்கப்பட்டும் எந்த நடவடிக்கையும் இல்லை. மேலும் அனுமதியற்ற கட்டிடத்தின் உரிமையாளர் அரசியல்வாதி என்பதால் சம்மந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் அவருடன் சேர்ந்துகொண்டு புகார்களுக்கு தவறாக தகவல்கள் அளிப்பது, எந்த நடவடிக்கைகளும் எடுக்காமலே எடுத்ததாக கூறுவது போன்றவற்றை செய்து மேற்கண்ட அனுமதியற்ற கட்டிடம் மற்றும் அதன் உரிமையாளர் அகியோரை காப்பாற்றி வருவதோடு, தங்கள் கடமைக்கும் துரோகம் செய்கின்றனர். எனவே இந்த மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட புகார் மனுவினை தீர விசாரித்து மேற்கண்ட அனுமதியற்ற கட்டுமானத்தின் மீது தகுந்த நடவடிக்கைகளை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய ஆணையினை பிறப்பிக்க வேண்டுமென தங்களை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனு தொடர்பாக இம்முறைமன்ற 16.03.2022 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மண்டல அலுவலர், மண்டலம்–04 அவர்களிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. இந்நேர்வு தொர்பாக மனுதாரர், மற்றும் மண்டல அலுவலர், மண்டலம்–04, 30.03.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற 16.03.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் அழைக்கப்பட்டனர். 30.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு தமது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

" சென்னை, தண்டையார்பேட்டை அஜிஸ் நகர் எண்ணூர் நெடுஞ்சாலை கதவு எண்.15/9 என்கின்ற முகவரியில் திரு. கிருஷ்ணகுமார் என்பவரால் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளிடம் எவ்வித அனுமதியும் பெறாமல் மேற்கண்ட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட எண்ணூர் நெடுஞ்சாலையில், சாலையின் இரண்டு பக்கங்களிலும் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்கு பாதை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, மேற்கண்ட சாலை குறுகிக் காணப்படுகிறது. எனவே திரு.கிருஷ்ணகுமார் என்பவர் அனுமதியில்லாமல் கட்டியுள்ள கட்டுமானத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் மேற்கண்ட தவறுகளுக்கு ஆதரவாக உள்ள அலுவலர்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. 30.03.2022 அன்றைய நேரடி விசாரணையில் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–04ல் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் திரு ஜி.பாஸ்கர் கலந்துகொண்டு கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார் :

"தண்டையார்பேட்டை, அஜிஸ் நகர், எண்ணூர் நெடுஞ்சாலை, கதவு எண். 15/9 என்கின்ற இடத்தில் திரு.கிருஷ்ணகுமார் என்பவரால் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சியிடம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளருக்கு 24.11.2021

அன்று Stop Work Notice/Notice calling for Approval plan அனுப்பப்பட்டது. மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கு Lock & Seal நோட்டீஸ் 13.12.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடம், கட்டட உரிமையாளரின் பயன்பாட்டில் உள்ள காரணத்தால், உரிமையாளருக்கு Demolition Notice வழங்கி மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு நெடுஞ்சாலையில் சாலையின் இருபுறத்திலும் எவ்வித ஆக்கிரமிப்பு இல்லை எனவும், ஆனால், பாதையின் இருபுறத்திலும் தற்காலிக சாலையோரக்கடைகள் மட்டுமே உ.ள்ன என்றும், ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடைகள் (Permanent Structure) இல்லை என்கிற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன் ” என்று தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் மனுதாரரின் முறையீட்டு மனு அவரது வாக்குமூலம், சென்னை பெருநகர மாநகராட்சி, மண்டலம்–04 உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவைகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரர் திரு.கிருஷ்ணகுமார் என்பவரால் அனுமதியின்றி கட்டியுள்ள கட்டுமானத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுத்திடவும், எண்ணூர் நெடுஞ்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றிடவும் இத்தவறுகளுக்கு ஆதரவாக உள்ள அலுவலர்களின் மீது நடவடிக்கை எடுத்திடவும் கோரியுள்ளார்.

- மனுதாரர் சுட்டிக்காட்டியுள்ள கட்டிடத்தின் உரிமையாளருக்கு 24.11.2021 அன்று Stop work Notice/Notice calling for approval plan அனுப்பப்பட்டுள்ளதை அறியமுடிகிறது.
- மேலும் மேற்கண்ட கட்டடத்திற்கு Lock & Seal நோட்டீஸ் 13.12.2021 அன்று வழங்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.
- புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டடம், கட்டட உரிமையாளரின் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் உரிமையாளருக்கு Demolition Notice வழங்கிட இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை அறியமுடிகிறது.

இந்நேர்வில் உரிய முறையில் களப்பணி மேற்கொண்டு இருந்தால், ஆரம்ப நிலையிலேயே பெரும்பாலான பிரச்சினைகள் முடிவுக்கு வந்து இருக்கும். ஆதலால் மண்டலம் 04–ஐ சேர்ந்த அலுவலர்கள் உரிய முறையில் களப்பணி ஆற்றிட நடவடிக்கை எடுத்திடுமாறு மண்டல அலுவலர், மண்டலம்–04 அவர்களை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும் மண்டலம் –04ஐ சேர்ந்த உதவி செயற்பொறியாளரால், மனுதாரர் தெரிவித்துள்ளபடி நெடுஞ்சாலையில் சாலையின் இருபுறத்திலும் எவ்வித ஆக்கிரமிப்புகளும் இல்லை ஆனால் பாதையின் இருபுறத்திலும் தற்காலிக சாலையோரக்கடைகள் மட்டுமே உள்ளன என்றும் நிரந்தரமாக ஆக்கிரமித்து கட்டப்பட்ட கடைகள் (Permanent enchroachment) இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து கண்காணித்து எந்தவித ஆக்கிரமிப்பும் நிகழாவண்ணம் நடவடிக்கை எடுத்திடவும் அறிவுறுத்தப்படுகிறது. மேலும் கட்டடம் கட்டட உரிமையாளரின் பயன்பாட்டில் உள்ள காரணத்தால் உரிமையாளருக்கு Demolition Notice இன்னும் வழங்கப்படவில்லை என தெரிவித்திருப்பது கண்டனத்திற்குறியது. அனுமதியற்ற கட்டடத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய

தொடர் நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள மண்டல அலுவலர், மண்டலம்–04, அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The Zonal Officer is instructed to follow the procedure as laid down in the rules governed by Town and Country Planning Act, Chennai Municipal Corporation Act and all connected subject manuals in a time bound manner like stop work notice / Notice calling for plan approval, lock and seal notice followed by demolition notice after necessary clearance from the Commissioner of Greater Chennai Corporation without any delay / time-lag in between. Petitions and complaints of this nature are received only when there is perceptible delay on the part of the Zonal authorities.

2022-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. B. விஜயகுமார்,
   எண்.14/15, சால்ட் குறுக்கு தெரு,
   துர்கா தேவி நகர், தண்டையார்பேட்டை
   சென்னை – 600 081.

2. மண்டல அலுவலர்,
   மண்டலம் –04,
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
   பழைய வண்ணாரப்பேட்டை,
   சென்னை – 600 021.

3. கண்காணிப்பு பொறியாளர்,
   மழைநீர் வடிகால்துறை,
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   பெருநகர சென்னை மாநகராட்சி,
   ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

11/4/22

செயலாளர்.